KEMENTERIAN PEMBANGUNAN LUAR BANDAR

KEMAS

# KERATAN AKHBAR

## வாழ்க்கைத் தடத்தை மாற்றியமைக்கும்

# சமூக மேம்பாட்டு இலாகா




புறநகர்ப் பகுதி வாழ் மக்களுக்கு முக்கியத்துவம் வழங்கும் வகையில் வாழ்வாதார உருமாற்றத்தை உறுதிசெய்யும் வகையில் சமூக மேம்பாட்டு இலாகா செயல்படுகிறது என்றால் அது மிகையாகாது.

புறநகர் வாழ் மக்களின் வருமானத்தைப் பெருக்கவும் அவர்களின் வாழ்வாதாரத்தை அனைத்து அம்சங்களிலும் மேம்படுத்தவும் பல்வேறு திட்டங்கள் இந்த இலாகாவினால் செயல்படுத்தப்படுகின்றன.

குறிப்பாக வறுமை நிலையில் உள்ளவர்கள், மாற்றுத்திறனாளிகள், இளைஞர்கள், மகளிர் மத்தியில் உயர்நிலை அறிவாற்றல் கொண்ட சமூகத்தை உருவாக்கவும் முனைப்பு காட்டப்படுகிறது.

கல்வி, தொழில்முனைவர், சமூகம் என முக்கிய அம்சங்களில் பல்வேறு திட்டங்கள் இந்த இலாகாவினால் செயல்படுத்தப்பட்டு வரும் வேளையில் இதற்கு மக்களிடம் இருந்தும் ஆதரவு கிடைத்துள்ளது.

அதிலும் கெமாஸின் சிறார் பராமரிப்பு மையம்/ பாலர்பள்ளி (தபிக்கா) திட்டம் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது.

சிறார்கள் மத்தியில் தொழில்நுட்பம், அறிவியல் சார்ந்த துறைகள் மீது ஆர்வத்தை ஏற்படுத்தும் வகையில் வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

மேலும் கற்றல் - கற்பித்தல் செயல் அனைத்தும் சிறார்களுக்குப் பிடித்த வகையில் அவர்கள் எளிதாகப் புரிந்துகொள்ளும் வகையிலும் வழங்கப்படுகின்றது.

இது தவிர கணினி, ஒப்பனைக் கலை, சமையல் கலை, கைவினைக் கலை, தையல் கலை போன்ற துறைகளில் வருமானத்தை ஈட்டவும் விரிவுபடுத்தவும் குறிப்பிட்ட மக்களுக்குப் பிரத்தியேக தொழில்திறன்



பயிற்சி வகுப்புகளும் நடத்தப்படுகின்றன.

குறுகிய கால வகுப்புகள் என்ற போதிலும் அதன்மூலம் பலர் நன்மையடைந்துள்ளனர். தனித்துவாழும் தாய்மார்கள், இளைஞர்கள், பி40 பிரிவினர் என புறநகர்ப் பகுதி வாழ் மக்கள் பலரும் இந்தப் பயிற்சிகளைப் பெற்று இன்று தொழில்முனைவர்களாக உருவாகியுள்ளனர்.

KETERANGAN AKHBAR

மக்கள் ஓசை
HARIAN TAMIL MAKKAL OSAI SUARA RAKYAT

| | |
|---|---|
| KERATAN BERTARIKH: | 12 OKTOBER 2020 |
| HARI : | ISNIN |
| RUANGAN: | - |
| HALAMAN: | 3 |